MASTER NEGATIVE NUMBER

6153.31

ஊழியன்
விசேஷ அநுபந்தம்
June 27, 1927

Record no. 148

Ūḻiyaṉ
Vicēṣa anupantam
June 27, 1927

Record no. 148

சென்னைப் பதிவு எண் ௧௫௦௪.

இதன் விலை அணா அரை.

தந்தி விலாசம்:— [illegible]

"ஊழியன்"

விசேஷ அநுபந்தம்.

அக்ஷய தை ௧௩௳ (௨௭—௧—௧௯௨௭) வியாழக்கிழமை.

தனவணிகவாலிபர் முதலாவது மகாநாடு.

இரங்கூன், தை-மீ ௫, ௬-௳கள்.

தலைவர் பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்கள்.

நிகழ்ச்சி முறை.

௯ தீர்மானங்கள் செய்யப்பெற்றன.

(நமது விசேட நிருபரிடமிருந்து.)

முதலாவது பர்மா தனவணிக வாலிபர் மகாநாடு இம்மதி ௫, ௬-ம் நாட்களில் இரங்கூனில காந்திகர் திருவாளர், பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் செவ்வனே நடைபெற்றது. முதல் தினம் சிதம்பரம் செட்டியாரவர்கள் கல்லூரியின் கண்ணும் இரண்டாம் நாள் திரு. மணியய்யரவர்கள் இல்லத்திலும் மகாநாடு நடைபெற்றது. பர்மாவின் பல பகுதிகளிலிருந்தும் பல வாலிபர்களும் பெரியோர்களும் விஜயம் செய்திருந்தனர். குறிப்பான சில பிறசமூகத்தவர்களும் அழைக்கப்பெற்று வந்திருந்தனர்.

வரவேற்பு.

முதல் தினம் பிற்பகல் ௨-௪௫ மணிக்கு தலைவரவர்கள் திரு. மணியய்யரவர்கள் இல்லத்திலிருந்து திரு. செட்டியார் அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். பெருத்த கரகோஷத்தினிடையே தலைவரவர்கள் தலைமைப்பீடத்தமர்ந்ததும், வரவேற்புக்கழகக் காரியதரிசி மு. சோமசுந்தரச் செட்டியாரவர்கள் தலைவருக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று படித்துக்கொடுத்தார்கள். பின்னர் வரவேற்பு சபைத் தலைவர் திரு. பி. கு. நா. அதிபர், சோமசுந்தரச் செட்டியாரவர்கள் தமது வரவேற்புப் பிரசங்கத்தைப் படித்து முடித்ததும், தலைவரவர்கள் காரியதரிசியவர்களால் படித்துக்கொடுக்கப்பெற்ற வரவேற்புப் பத்திரத்திற்கு உகந்த முறையில் சிறிது பதிலளித்தார்கள். ஈப்போ தனவைசிய சங்கம் கண்டது தாமல்லவெனவும், தமது அன்பர்களால் அது காணப்பெற்றதாகவும், தாம் அதன் மூலம் ஏதோ சிறிது நன்மை செய்திருக்கக்கூடுமென்றும், அங்கிருந்த நாட்களில் அதில் கலந்து இரு மகாநாடுகளை கூட்டியதாகவும் குறிப்பிட்டுவிட்டுத் தமது முன்னுரைப் பிரசங்கத்தைப் படித்தார்கள். இத்துடன் முதல் நாள் மகாநாடு முடிவு பெற்றது.

கந்தன் மணவழக்கு.

இரவு ௭-மணிக்கு ரங்கூன் தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தார் கந்தன் மணவழக்கு எனும் கோர்ட்டு விசாரணையை வெகு திறமையாக நடித்துக்காட்டினார்கள். இவ்வழக்கு, குகப்பெருமான் வள்ளி நாயகியைப் பலாத்காரமாக அழைத்துச் சென்றுவிட்டதாகவும் ஒழுங்கான முறையில் மணம் முடித்துச் செல்லவில்லை என்றும் அவர்மீது நம்பிராசனால் கைலயங்கிரி நீதி மன்றத்தில் தொடுக்கப்பெற்ற வழக்காகும். இருதரப்பிலும் சாக்ஷிகள் விசாரிக்கப்பெற்று, இறுதியில் கௌரவமாக சுப்பிரமணியர் விடுதலை பெற்றார்.

இரண்டாம் நாள்.

காலை ௯ மணிக்கு திரு. மணியய்யரவர்கள் இல்லத்தில் விஷயாலோசனைக் கூட்டம் கூடியது. பல தீர்மானங்கள் வந்தன. இரண்டு தீர்மானங்களைப்பற்றி, திருத்தப் பிரேபனைகள் வந்தன. பலத்த விவாதங்களின் பிறகு, தீர்மானங்கள்நிறைவேறின.

மகாநாடு ஆரம்பம்.

மாலை மூன்று மணிக்கு, தலைவர் வந்ததும் மகாநாட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பெற்றது. வரவேற்புக் கழகத் தலைவர் தலைவரவர்களுக்கு மாலை சூட்டினர். பின்னர், தலைவரவர்கள் சில இன்னுரை வழங்கினார்கள். அவற்றின் சுருக்கம்:—

"அன்பிற் சிறந்த சகோதரர்களே!

இன்று நாம் முக்கியமாகச் செய்யவேண்டிய தீர்மானங்கள் பல உள. காலையில் விஷயாலோசனைக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் யோசனைக்கு வந்து முடிவு செய்யப்பெற்றுள்ளன. அவற்றைக் கொண்டுவந்தவர்களும் ஆமோதித்தவர்களும் ஆதரித்தவர்களும் அவற்றைப்பற்றி நன்குப் பேசுவார்கள். பல தீர்மானங்களையும் நிறைவேற்றுவது எளிது. ஆனால் அவற்றைச் செயலில் கொண்டுவருவது சிரமசாத்தியமே. எந்தெந்த விஷயங்கள் பற்றித் தீர்மானங்கள் ஆலோசனைக்கு வரப்போகின்றன வென்பது நேற்று உங்கள் முன் படித்துக் காட்டப்பெற்றது. அவற்றுள் இரண்டு அல்லது மூன்று அதிக முக்கியமானவை. அவற்றை எப்பாடு பட்டாகிலும், நாம் செயலில் கொண்டுவருதல் மிகமிக அவசியம். அவற்றை எதிர்ப்பவர்களைப்போலவே அவற்றை ஆதரித்து, செயலில் கொண்டுவராதவர்களும் ஆவார்கள். எனவே அவ்விருதரத்தாருக்கும் எவ்வித பேதமுமில்லை. நம் பெண்களை உடன் அழைத்து வருதல் பற்றி, பலர் பல விணக்களை எழுப்புகின்றனர். அவற்றுள் எல்லோரும் அவ்வாறு அழைத்துவருவார்களா என்பதே தலையாயது. இவ்விஷயம் செய்கையில் காட்டப்படவேண்டிய ஒன்றேயன்றி, வாய்ப்பேச்சிற்கு உரியதல்ல. எனவே, இதுபற்றி ஓர்தீர்மானங்கூடவேண்டுவதில்லை என்பது என்னுடைய கருத்து. எனினும் நம்மவரிடை ஓர்வகைப் புத்துணர்ச்சி தோன்றும்பொருட்டே, இத்தகைய தீர்மானமொன்றை நிறைவேற்றினோமேயன்றி வேறல்ல. அதனை விரைவில் செயலில் கொண்டுவரத்தக்கவாறு, சிலர் அவ்வளவு தயாராக இருக்கின்றனர். எனவே, நிச்சயமாக, செயலில் விரைவில் வருமென்பது திண்ணம். இதை நிறைவேற்றுவதால், நாளையே செயலில் கொண்டுவந்து விடவேண்டுமென்பதல்ல. தேக அசௌக்யம் காரணமாகவோ, பிற வசதியின்மை காரணமாகவோ இதைச் சிலர் செய்யமுடியாதிருக்கலாம். எண்ணமும், போதிய வசதியும், உணர்ச்சியும் உள்ளவர்களுக்கு இது ஊக்கத்தை அளிப்பதாக இருக்கும். இவ்வாறு உடன் அழைத்து வருதல் நம் சமூகத்திற்கே பெருநலன் என்பது திண்ணம். சிலர் இவ்வாறு செய்தல் தமக்கு சம்மதமென்றும், எனினும் பெரியோர்கள் இதை ஆட்சேபிக்கின்றனர் என்றும் கூறுகின்றனர். எல்லோரையும் கேட்டு, இவ்விஷயத்தில் முடிவு செய்வதென்பது முடியாதகாரியம். எனவே இதில் ஆர்வமுள்ளவர்கள் விஷயத்தை நன்காராய்ந்து ஓர்விதமுடிவிற்கு வரவேண்டும். இதுபற்றி ஆட்சேபிப்பவர்கள் உடன் அழைத்துவரலாகாதென்பதற்குச் சரியான காரணங்கள் எதுவும் கூறவில்லை. கூட்டிவராததால் என்ன நிலைகள், கூட்டிவருவதால் என்ன கஷ்டம் என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்தல் அவசியமாகும். பிறர் யோசனைக்காக நீங்கள் எதுவும் செய்ய வேண்டுவதின்று. நீங்களே யோசித்து முடிவு செய்யுங்கள். இதில் நமக்குத் திடநம்பிக்கை யிருந்தால், பிறர் சொல்வதைப் பொருட்படுத்தவேண்டாம். சந்தேகமிருந்தால் எதையும் செய்யமுடியாது. அச்சத்தினின்று எழும் ஐயத்தை நாம் அறவே விட்டொழிக்க வேண்டும். நாம் தற்போதிருக்கும் நிலைமையிலிருந்து வந்தால், நமது சமூகத்திற்கே கேடுவரும். நம்முன்னோர் எத்தகைய வாழ்க்கை நடத்திவந்தார்கள் என்பதைச் சித்தையோடேவளித்து, அதன்படி நடக்கவே நாம் முயலுகிறோம். ஆனால் காலத்திற்கேற்ற சிற்சில திருத்தங்கள் மட்டும் செய்ய எண்ணுகின்றோம். முன்னோர்கள் அக்காலத்திற்கேற்ற சிறப்புடன் வாழ்க்கை நன்குக நடத்திவந்தார்களென்பதையும் அவர்கள் பெண்களை உடன் அழைத்து வாராததற்குப் பல காரணங்கள் உள என்பதையும் நீங்கள் அறிதல்வேண்டும். அவற்றை, அவசியமாயின், பின்னர் விளக்குகிறேன். இத்தீர்மானத்தை அநுஷ்டானத்தில் கொண்டுவரத்தக்க யோசனைகள் கூறுவீர்களாயின், மிக நலமாயிருக்கும். முதல் தீர்மானம் சுவாமிஜி சிரத்தானந்தரது மரணத்தைக் குறித்ததாகும். அது வருமாறு:-

(௧) சுவாமி சிரத்தானந்தர்.

"இந்து தர்மத்தைச் செவ்வனே பிரசாரம் செய்து, மக்கட்கு மாபெருந் தொண்டாற்றி வந்த சுவாமி சிரத்தானந்தர் அவர்கள் உடல் நீத்ததுபற்றி, இம்மகாநாடு வருந்துகின்றது. அவர் ஆற்றிவந்த உயர் தனி வேலையை மக்கள் மனந்தளராது செய்ய வேண்டுமென இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

இத்தீர்மானத்தைத் தலைவரவர்கள் படித்துவிட்டு, சுவாமிஜி அவர்களின் அரிய வாழ்க்கையையும் இந்து மதத்திற்கும் தேசத்திற்கும் அவர் செய்துள்ள ஒப்பிலா ஊழியத்தையும் நன்கு விளக்கிக் கூறினார்கள். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

(௨) மலாய் நாட்டில் வெள்ளம்.

"மலாய்நாட்டில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் கோலக்கஞ்சார், டெலுக்கான்சன், கோலாலெம்பூர்—முதலிய பல இடங்களில் ஜனங்களுக்கு நிகழ்ந்த கஷ்டங்களைக் கருதியும் செட்டிநாட்டாரும் மற்றப்பொருள்களோடும் சேர்ந்திருக்கும் கஷ்டத்தைக் குறித்தும் இம்மகாநாடு வருந்துவதுடன், தனது அநுதாபத்தையும் தெரிவிக்கிறது."

இத்தீர்மானமும் தலைவராலேயே பிரேரேபிக்கப்பட்டு, ஏகமனதாக நிறைவேறியது.

(௩) தேகப்பி[illegible]

"உடல் வலிமையுடன் [illegible] பிரமாய் வாழவேண்டியத் [illegible] தாதலால், ஒவ்வொரு [illegible] தேசம் பயிற்சியை ஒழுங்காக [illegible] தினமும் செய்யவேண்டுமென [illegible] தீர்மானிக்கிறது."

இத்தீர்மானத்தை திருவாளர் [illegible] இராமசாமிச் செட்டியார் பிரேரேபித்துப் பேசியது வருமாறு:— [illegible]

இதை ஆமோதித்து, திருவாளர் [illegible] செட்டியார் பேசினர்.

[illegible]

(௪) கல்வி.

"[illegible]"

இதை திருவாளர் மு. [illegible] செட்டியார் பிரேரேபித்துப் பேசியதாவது:— [illegible]

இதை ஆமோதித்து, திருவாளர் மு. சோம[illegible] [illegible]

[அடுத்த பக்கம் [illegible]]

ஊழியன் காரைக்குடி
அட்சய-ஹு தை-மீ கசஉ

தீர்மானங்கள்.

இரங்கூனில் கூடிய தனவணிக வாலிபர் முதலாவது மகாநாட்டுத் தீர்மானங்கள் இவ் அநுபந்தத்தில் வெளியாகி யிருக்கின்றன. அவற்றைச் சிறிது நோக்குவோம். ஒன்பது தீர்மானங்கள் அம் மகாநாட்டில் செய்யப்பெற்றிருக்கின்றன. அவை, சிரத்தாநந்தர், மலேயா வெள்ளம், உடற்பயிற்சி, கல்வி, கதர், புலான் மறுத்தல், பெண்களை அந்நியநாடுகட்கு அழைத்துச்செல்தல், சமூகச் சீர்திருத்தம், பால்ய விதவா விவாகம் பற்றியன. தீர்மானங்கள் அனைத்தும் நல்லனவே. அவற்றுள் செயலிற்காட்டவேண்டுவன பல. பொதுவாக அத்தீர்மானங்களையெல்லாம் செய்கைக்குக் கொண்டுவருதல் வேண்டும் என்று கூறுவதன்றி, ஒவ்வொரு தீர்மானத்தின் அவசியத்தையும் எடுத்து ஈண்டு விளக்க இடமில்லை.

முதலாவதாகச் செய்யப்பெற்ற சிரத்தாநந்தர் தீர்மானம் அவர் மரணத்திற்கு வருந்துவதாக இருக்க வேண்டுவதில்லை என்பது நமது கருத்து. அப் பெரியார்க்கு அருமையாகக் கிடைத்த உயரிய பெரு மாணத்திற்கு மகிழ்ந்து, அன்னார் சீரிய செயலைப் பாராட்டி, அவரனைய பெரியார் பலர் தோன்றவேண்டுமென்று ஆண்டவனை வேண்டுவதாக அத் தீர்மானம் இருந்தால் நன்றாக இருக்கும். அஃது இருக்கட்டும்.

பெண்களை ஆண்டு அழைத்துச் செல்தல் பற்றி முன்னரே எழுதியிருக்கிறோம். அதனைத் தலைவர் முன்னுரை அழுத்தமாகக்கூறியிருந்தது. அது பற்றித் தீர்மானித்தது போற்றத்தக்கது. அது செயலுக்கு வரும் நாளை எதிர்நோக்கி நிற்போம். அத்தீர்மானத்தின் பேரில் பல அன்பர் பேசியுள்ளார். இன்னோன்ன காரியங்கட்கெல்லாம் பிறரை எதிர்நோக்கி நின்றல் கூடாது. ஆர்வமுள்ளோர் செயலுக்கு வந்துவிடல் வேண்டும். முக்கியமாக இதுபற்றி மகாநாட்டில் உரை நிகழ்த்திய அன்பர்கள் முதன்முதலில் இச்செயலில் தலைப்பட முந்துவார்கள் என நம்புகிறோம். பெண்களை அழைத்துவரல் வேண்டுமென்பதற்குப் பலப்பல காரணங்கள் பகரப்பட்டன. காரணங்களில் தள்ளத்தக்கனவும் உண்டு. "ஒழுக்கம் குன்றாதிருக்கப் பெண்களை உடனழைத்து வருதல் அவசியம்" என, வீர. பழனியப்ப செட்டியார் என்ற ஒரு அன்பர் உரைத்தார். இதனை எவரே மறுக்க வல்லார்? இதைவிட வேறு காரணமும் வேண்டுமோ? "இத் தீர்மானத்தைத் தாய் நாட்டில் பேசிக்கொள்ளலாமென்று சிலர் செப்புகின்றனர். அங்கிருப்பவர்க்கு இங்கு தனி வாழ்க்கை நடத்துவோரின் உணர்ச்சி இருக்குமா?" என அன்பர் சோமசுந்தரனார் கேட்கின்றார். இது மிகவும் சரி. இங்கு கூடிக் குலாவிக் களிப்போர்க்கு அவ்வுணர்ச்சி இராதென்பது திண்ணம். இத் தீர்மானத்தை ஆற்ற வல்லார் அவரே. "ஆனால், செய்கை! செய்கை!!" என்று செப்பி அமைவோம்.

இனி, தீர்மானங்களுள் நமது கவனத்தை ஈர்ப்பன "பால்ய விதவா விவாகம்." இத்தீர்மானத்திலுள்ள சொற்றொடர்கள் பொருட் பெருக்கத்தோடு அழகு பெற அமைந்து கிடக்கின்றன. அச் சொற்களை ஒவ்வொன்றாக எடுத்து விரிவுரை கூறப் புகுந்தால், அளவு கடந்து பெருகிவிடும். அத்தீர்மானத்தை நாம் ஏற்கின்றோம். அதுபற்றிய நமது கருத்தை விரித்து விளக்க ஈண்டு இடமில்லை. அதில் வாலிப என்றிருப்பது வயதளவாகக் கொள்ளப்படுமானால், அது நமக்கு உடன்பாடன்று. ஆண்டில் மிக முதிர்ந்திருக்கலாம், அதைப்பற்றிக் கவலையில்லை. வாலிப உணர்வும் விருப்பமும் இருக்குமானால், அவர் செய்து கொள்ளவேண்டுவதே. வாலிபர் என்ற சொல்லை அவ்வாலிப மகாநாட்டார் உணர்வளவாகவே கொண்டிருப்பதால், இவ்விடத்தும் அப்பொருளையே கொண்டிருத்தல் கூடும். அவ்வாறானால், அத்தீர்மானம் நமக்கு முற்றும் உடன்பாடு. அதுவும் பிறவும் நடைமுறையில்வர, அன்பர்கள் முயல்வார்களாக!

தலைவர் முடிப்புரை.

மகாநாட்டுத்தலைவர் முடிப்புரை சுருங்கிய அளவினதாகவே வந்திருக்கிறது. அதில் இரண்டு பொருள்களை எடுத்துப் பேசுவோம். முடிப்புரையில் ஒரு பொருள் நமக்கு வியப்பாகத் தோன்றியது. "பண்டைக்காலத்திற்கும் விரோதமில்லாமல், தற்கால முறைகளுக்கு அநுகுணமானதுமான அம்சங்களை வகுத்துக்கொண்டு வேலை செய்வதே நலமாகும்." என்ற சொற்றொடர் தலைவர் உரையில் காணப்படுகிறது. இது எப்படி முடியும்? பழையகாலம், பழையகாலம் என்று பேசுவதில் பயனில்லை. எந்தக் காலமானாலும் நல்லன கொள்ளவேண்டும் என்ற ஒன்றே குறி. தலைவராகிய நமது அன்பருக்கு எல்லாவற்றையும் சமாதானம் செய்துவிட விருப்பம். நடக்க முடியாததைச் செய்யமுடியாதே.

"பெண்களைக் கூட்டிவருவதால், சில கஷ்டங்களிருப்பது உண்மைதான்; ஆனால் கூட்டிவாராததால் நேரும் தீமைகட்கு அவை அதிகமல்ல" என்று தலைவர் சாற்றுவது பொன்னே போற் போற்றத்தக்கது. தீமையில்லாமல் முற்றும் நன்மையாக விளையத்தக்கது எதினும்இரா உலகத்தில் என்பது தேற்றம். எனவே, ஒன்றிலுள்ள பெருநன்மைகளை மறந்து, சிறு தீமைகளையே செப்பிக்கொண்டு திரிவதால் ஒரு பயனும் விளையாது. பகுத்தறிந்து செயலாற்ற முந்துவதே அறிஞர் கடன். இதுபற்றிய தலைவர் கருத்துச் சாலச்சிறந்ததாகும்.

வரவேற்பு உரை.

இம் மகாநாட்டின் வரவேற்புத் தலைவர் திருவாளர் சோமசுந்தரச் செட்டியாரவர்கள் உரையைச் சிறிது நோக்குவோம். இவ் உரை முன்னரே கிடைக்குமாறு அனுப்பப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இத்தகையவற்றில் நம் தனவணிக அன்பர்கள் முன்முயற்சி எடுத்துக்கொள்தல் அவசியம். இவ் உரை இவ் அநுபந்தத்திலேயே வெளியிட முடிந்தது. இருக்கட்டும். இதுபற்றி விரித்தெழுத இடமில்லையெனினும், சிறிது பார்க்கலாம்.

வரவேற்பு உரைபோரார்வத்தோடு நிகழ்த்தப்பெற்றிருக்கின்றது. நன்றாக இருக்கின்றது. அது கூறும் பொருள்களுள் பெரும்பாலன நமக்கு உடன்பாடு. கலப்புமணத்தை அவ்வுரை மறுக்கின்றது. அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அதுபற்றிப் பலப்பல காரணங்கள் பகரப்பட்டிருக்கின்றன. அவ்வனைத்திற்கும் பதில் இறுக்க ஈண்டு இடமில்லை. "காதல் சென்றவழிமணம் நிகழவேண்டுவதே; (காதல் என்பது காமமன்று) அதை ஜாதி முதலிய எதுவும் தடை செய்பலாகாது." என்பது நம்முடைக் கொள்கை. இதனை எத்தனையோ பலமுறை நாம் கூறிவந்திருக்கின்றோம். வரவேற்புத்தலைவர் அன்பர் சோமசுந்தரச்செட்டியாரவர்கள் உரை ஜாதிப்பிரிவைப் பெரிதும் வற்புறுத்திக் கூறுகின்றது. அதை நாம் முற்றும் மறுக்கின்றோம். அவ் அன்பர் பொதுக்காரியங்களில் உழைப்பதில் பெரு விருப்பங்கொண்டவர் என்பதை அன்பர்கட்கு நினைப்பூட்டுவோம். வரவேற்புக் கழகத்தலைமை பூண்டு, மகாநாட்டை நடாத்திவைத்த அவருக்கு வாழ்த்துக்கூறுவோம்.

நிகழ்ச்சி முறை.

(முன் பக்கத்தொடர்ச்சி.)

வதே தமது முக்யக் கடமையென்று கருதுகின்றனர். மணமுடித்துக் கொள்ள வேண்டியது மைந்தர்களின்இஷ்டத்திற்கே விடப்பட்டிருக்கிறது. நம்மைப் பலரும் தாழ்ந்தவர்களெனக்கருவற்கு நம்மிடம்கல்வி அறிவு பெரிதும் இல்லாததே காரணமாகும். நமது பிள்ளைகளை இங்கு கூட்டிவந்தும் படிக்க வைக்க வேண்டியது அவசியம். நம் பெண்கள் கல்வி அறிவில்லாதவர்களாயிருப்பதால், நம் சிறுவர்கள் அங்கிருக்கையில் அவர்களது கல்விக்குப் பெருங்கெடுதல் ஏற்படுகின்றது."

சிறு கூடற்பட்டி ராம. அண்ணாமலை என்னும் இளைஞன் இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசியதும், தீர்மானம் நிறைவேறியது.

(ரு) கதர்

"நம் நாட்டு மக்களால் நூற்று நெய்யப்பெற்ற ஆடையையே வாலிபர்கள் அனைவரும் அவசியமாகக் கொண்டு, அணிய வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது."

இத் தீர்மானத்தைத் திருவாளர் பழ. ப. நாராயணன் செட்டியார் பிரரேபித்துப் பேசியதாவது:—"கதர் விஷயத்திற்கெனத் தனியாக ஓர் தீர்மானம் கொண்டுவரவேண்டுவது அவசியமில்லை. தற்காலம் மிகச்சிலரே கதராடை தரிக்கின்றனர். கதர் தரிப்பதால் ஏற்படும் நன்மைகள் அளவிட முடியாதன. இதைச் சிலர் வெறுப்பது சரியல்ல. நாட்டிற்கும் நாட்டிலுள்ள ஏழை மக்கட்கும் எண்ணிறந்த நலன்கள் அளிக்கும் இக்கதராடையை நம்மவர் அனைவரும் உடுத்தி வர வேண்டுமென்ற நோக்கத்தோடேயே இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது."

இதை ஆமோதித்து, திருவாளர் சுப. இராமசாமிச் செட்டியார் பேசியதாவது:—"தேசத்தின் தற்கால நிலையைக் கருதுகையில் ஒவ்வொருவரும் கதர் உடுத்த வேண்டுவது அவசியமாகும். இவ்வாறு செய்வதால் ஏழை மக்கட்கு உணவளிக்கப்பெறுகின்றது. அந்நிய நாட்டிற்கு ஆண்டுதோறும் அறுபது கோடி ரூபாய் உடைக்கெனச் செல்லுகின்றது. திருப்பூர் முதலிய இடங்களில் அநேகம் ஏழைகள் இதைக்கொண்டு பிழைத்துவருகின்றனர். நம் ஆடை விஷயத்திலுங் கூட நாம் பிற நாட்டாரை எதிர்பார்த்திருப்பது நன்றன்று."

பின்னர் டேரியா திருவாளர் பி. மு. பி. சுப்பிரமணியன் செட்டியார் ஆதரித்துப் பேசியதாவது:—"மகாத்மா காந்தி இக்கதர் விஷயத்தையே தமது முக்கியக் கொள்கையாகக் கொண்டுள்ளார்கள். கண்ணபிரான் அர்ச்சுனனுக்கு சுபசக்ரம் அளித்தது போல காந்தியடிகள் நமக்கு ராட்டினச் சக்ரத்தைத் தந்திருக்கிறார். முன்னர் கதராடை முரடாக இருந்தது. இப்பொழுதோ மிக மெல்லியதாக இருக்கின்றது. இனியும் கதராடை உடுத்த நாம் யோசிக்கலாமா?"

டேரியா, திருவாளர் வீர. பழனியப்பச் செட்டியார்பேசியதாவது.—"பண்டைக்காலத்தில் நமது தாய் மார்கள் ராட்டினத்தில் நூல் நூற்றுவந்தனர். அந்நூலைக் கொண்டு நெய்யப்பெற்ற உடையையே நம் முன்னோர்கள் அணிந்தனர். தற்பொழுது சேலம் வேஷ்டி கும்பகோணம் வேஷ்டி முதலியவற்றின் மூலமாக, நமது பணம் கௌரவமாகப் பிடுங்கப்படுகிறது. நன்றாகத் துவைத்து வெள்ளையாகக்கட்டிக் கொள்ளலாம். கதருக்கு மாறாகக் கூறப்பெறும் ஆட்சேபங்களெல்லாம் போலியானவையேயாகும். எனவே நாமெல்லோரும் கதரை ஆதரிப்போமாக!"

தலைவர் கதரின் அவசியம்பற்றிச் சிறிது பேசிய பின்னர்; தீர்மானம் நிறைவெய்தியது.

ஆசிர்த்தந்தி.

இம்மகாநாடு இனிது வெற்றியுடன் நடைபெற வேண்டுமெனக்கோரி, காந்திநகர் திருவாளர்களான சொ. முருகப்ப செட்டியார், ராய. சொக்கலிங்கன், காரைக்குடி சா. கணேசன் செட்டியார், ஆவி. லெ. அருணாசலன் செட்டியார் ஆகிய இவர்கள் அனுப்பியிருந்த தந்திச் செய்திகள் வாசிக்கப்பெற்றன.

(சு) புலான் மறுத்தல்.

"மனிதர்க்குப் புலால்உணவு அவசியமில்லையாதலால், நம்மவர்கள் அனைவரும் சுத்தபோஜனமே கொண்டு கருணையுடனும் வீரத்துடனும் வாழும்படி இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

இதைப் பிரரேபித்து, டேரியா திருவாளர் பி. மு. பி. சுப்பிரமணியன் செட்டியார் பேசியதாவது:—"உயிர்க்கொலை செய்வதால் நன்மையுண்டா என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்தல்வேண்டும். நமக்கு முடியாமலிருந்தால், சிறுதெய்வங்களுக்குப் பலியிட நேர்ந்துகொள்வது வழக்கமாயிருக்கிறது. இது பொருத்தமில்லாததாகும். நமக்கு நோய்வந்தால், ஆடு கோழிகள் என் செய்யும்? சிலர் கொன்றால் பாபம், அது தின்றால் போச்சு என்று சொல்லித் தின்கிறார்கள். இவ்வாக்கியத்தின் உண்மைப் பொருளை அவர்கள் அறியவில்லை என்றே நான் கூறுவேன். அதாவது கொன்ற பிராணி மறு ஜென்மம் எடுத்து நம்மை (அது தின்றால்) தின்றால் அப்பாவம் அத்தோடு தீரும் என்பதாகும்."

திருவாளர் பழ. ப. நாராயணன் செட்டியார் இதை ஆதரித்து, புலான் மறுத்தலின் அவசியத்தை விளக்கினார்கள். தீர்மானம் ஏகமனதாக நிறைவெய்தியது.

(எ) பெண்களை உடன் அழைத்துவருதல்

"ஆடவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று வாழுங்காலத்தில் பெண்களையும் உடனழைத்துவருதல் பலவாற்றானும் நலன் பல விளைக்குமாதலால், இனி நம்மவர்களும் இம்முறையை அநுஷ்டிக்கவேண்டுமென இம் மகாநாடு சிபார்சுசெய்கிறது."

இந்தத் தீர்மானத்தை திருவாளர் செ. அ. ராம. அருணாசலச் செட்டியார் பிரேரேபித்துப் பேசியதாவது:—"இது ஒரு முக்யமான தீர்மானமாகும். இதனை நீங்களெல்லோரும் நன்கு யோசித்து முடிவுசெய்து, அநுஷ்டானத்தில் கொண்டுவர, முயற்சி செய்ய வேண்டுகிறேன்."

பியோப்புவை திருவாளர் ராய. சிதம்பரச் செட்டியார் இதனை ஆமோதித்துப் பேசியதாவது:—"உடனழைத்து வருவதால் ஏற்படும் நலன்கள் பல. அழைத்து வராததால் ஏற்படும் தீமைகளை ஒவ்வொருவரும் நன்கறிதல் வேண்டும். இது வெகு முக்யமான விஷயமாதலால், நீங்களெல்லோரும் இதனை ஆதரிக்கவேண்டுகிறேன்."

டேரியா திருவாளர் பி. மு. பி. சுப்பிரமணியன் செட்டியார் வருமாறு பேசினார்:—"உடன் அழைத்து வருவதால் கெடுதிகள் பல இருப்பதாக, சிலர் சொல்லுகின்றனர். அவைகளை நன்கு ஆராய்ந்து பார்ப்போமானால், அவற்றிற்குச்சிறிதும் ஆதாரமில்லை என்பதைக்காண்போம். பெண்களை அழைத்து வருவதால், நாம் சிக்கனமாக வாழமுடியும். இன்னும் பலநன்மைகள் உண்டு. எனவே, இத்தீர்மானத்தை ஆதரிக்கவேணும்."

திரு. ராம. கருப்பன் செட்டியார் ஆதரித்துப்பேசியதாவது:—"நம்மவர்கள் முன்னர் பெண்களை உடன் அழைத்து வாராததற்குச் சில காரணங்கள் இருந்தன. பாய்க்கப்பல்களில் அவர்கள் வரவேண்டியதாக இருந்தது. எப்பொழுது கரைவந்து சேருமென்ற நியதி கிடையாது. எனவே பெண்களை அழைத்துவரவில்லை. அத்தகைய கஷ்டங்கள் இக்காலத்திலில்லை. போதிய சௌகரியங்களுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் சுகமாக வந்து சேர்ந்துவிடலாம். எவ்விதக் கஷ்டமுமில்லை. முன்னோர்கள் பண்டமாற்றுச்செய்தார்களேயன்றி, நெடுங்காலம் வேற்று நாடுகளில்தங்கி, தனிவாழ்வு வாழ்ந்தார்களில்லை. நாம் இந்நாடுகளில் பணம் சம்பாதிக்கப் படும்பாட்டை நம்முடனிருந்து அவர்கள் சிறிது காண்பார்களானால், தற்பொழுது இருந்து வருவதுபோல் செலவினங்களைப் பெருக்கமாட்டார்கள். நமது வாழ்க்கையில் சிக்கனமும் ஏற்படும். சந்ததி விருத்தியாகவும் இடமுண்டு."

டேரியா, திருவாளர் வீர. பழனியப்பச் செட்டியார் ஒழுக்கம் குன்றாதிருக்க, பெண்களை உடனழைத்துவருதல் அவசியமென்றார்கள்.

ஓவ் திருவாளர் அ. சிதம்பரம் செட்டியார் பேசியது:—"நாம் பல இன்னல்களையும் அநுபவித்துக்கொண்டு பொருள் ஈட்டுவது நமது சந்ததியாருக்காகவன்றோ? நமது மனைவி இங்கிருப்பின், குழந்தைகளுக்கு கல்வி அபிவிருத்தியாகவும் இடமுண்டு. கோஷா முறையை அநுஷ்டித்து வரும் முகம்மதிய சமூகத்தவர்களும் கூடத் தங்களது பெண்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லும் இந்நாளில், நாம் மட்டும் ஏன் தனியாக இங்கு வந்து துன்புற வேண்டும்? நாமும் அவர்களைப்போல் அழைத்துவந்து, பலஇன்பங்களையும் அநுபவிக்கலாகாதா?"

திருவாளர் மு. சோமசுந்தரன் செட்டியார் ஆதரித்துப் பேசியதாவது:—"இவ்விஷயத்தில் நடு நிலைமை கொண்டு நாம் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும். முற்காலத்தில் பெண்களை அழைத்துவர வசதிகள் இல்லை. அழைத்துவரக்கூடாதென்ற நீர்மானமும் இல்லை. இத்தீர்மானத்தால் எல்லோரும் அழைத்துவரவேண்டுமென்பதல்ல. போதிய சௌகர்யமுள்ளவர்கள் மட்டுமே அழைத்துவருவார்கள். தற்போதிருக்கும் நிலைமையில் வாழ்நாளில் பெரும்பகுதி தனி வாழ்க்கையிலேயே கழிகின்றது. ஊர் சென்றிருக்கும் காலங்களிற்கூட, பல விசேடங்களையும் முன்னிட்டு வேற்றார்கள் செல்ல நேர்கின்றது. இத்தகைய நிலையில் கணவனுக்கும் மனைவிக்கும் அன்பு நிகழ இடமுண்டோ? இத்தீர்மானத்தை நம தாய் நாட்டில் பேசிக்கொள்ளலாமே என்று சிலர் செப்புகின்றனர். அங்கிருப்பவர்களுக்கு இங்கு தனி வாழ்க்கை நடத்துவோரின் உணர்ச்சி இருக்குமா? ஆகவே, இங்கு பேசி முடிவு செய்து அழைத்து வருவதுதான் சாலச் சிறந்ததாகும்."

திருவாளர் பி. கு. கா. அதிபர் கண்டனூர் மு. ராம. சோமசுந்தரன் செட்டியார் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய பின், தீர்மானம் நிறைவேறியது.

(அ) சமூகச் சீர்திருத்தம்.

"நமது சமூகத்தில் செய்யவேண்டிய இன்றியமையாத சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தவேண்டுமெனவும் விசேஷ காலங்களில் செலவினங்களைக் குறைக்க சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமெனவும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது."

இத்தீர்மானத்தை ஓவ் திருவாளர் அ. சிதம்பரம் செட்டியார் பிரரேபித்து, பேசியதாவது:—"நம்மவரது செலவினங்கள் வெகு அதிகமாக இருந்து வருகின்றது. அவைகளைச் சுருக்கவேண்டுவது நாம் செய்ய வேண்டிய சீர்திருத்தமாகும். அதிகச் செலவினால் நம்மில் பலர் கடனாளிகளாகின்றனர். பெண்கள் சொல்வதைக் கேட்டு, நிலையறியாது செலவு செய்கிறோம். எங்கள் ஊரான கீழச்சிவற்பட்டியில் ஒரு தனவந்தர் தன் பேரன் புதுமையில் தீர்மானத்தை அநுஷ்டிக்காது வார்ச்சினி கொடுத்துவிட்டார். கூட்ட வார்க்கூட்டத்தில் தீர்மானம் செய்துவிட்டு மீறுவதென்றால், என்ன பயன் ஏற்படும்? மற்றும் பல முக்யமான திருத்தங்களும் நாம் செய்யவேண்டியிருக்கிறது."

திருவாளர் வீர. பழனியப்பச் செட்டியார் ஆமோதித்து, சிறிது பேசிய பின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

(கூ) பாலிய விதவா விவாகம்.

"நமது ஜாதியில் மனைவியை இழந்த ஆடவர் மறுவிவாகம் செய்துகொள்வதுபோல், ஆடவரை இழந்த வாலிபப் பெண்களும் விரும்பினால், புனர் விவாகம் செய்து கொள்ளலாமென இம் மகாநாடு சிபார்சு செய்கிறது."

இத்தீர்மானத்தை பிகு. கா. அதிபர் கண்டனூர் திருவாளர் மு. ராம. சோமசுந்தரன் செட்டியார் பிரேரேபித்துப் பேசியதாவது:—

"கன்னி விதவைகள் விரும்பினால், கலியாணம் செய்துகொள்ளவேண்டிய வசதிகள் இருக்கவேண்டுவது அவசியம். முற்காலத்தில் விதவைகள் அநுஷ்டித்துவந்த முறைகள் வேறு. உண்பன முதலிய சகலமும் நம்போலன்று. உடன் கட்டை யேறிய வழக்கம் பிற்காலத்தில் நின்றது. கணவன் இறந்த செய்திகேட்டதும், உயிர் நீத்த உத்தமிகளுமுண்டு. தற்காலம் அவ்வாறெல்லாமில்லை. முற்றும் மாறாக இருக்கின்றது. வற்றக்காய வைத்த பாலை விதவைகள் பலர் சாப்பிடுகின்றனர். அவர்கள் தனிவாழ்க்கை எவ்வாறு நடத்த இயலும்? ஆண்கள் மறு விவாகங்கள் முடித்து இன்புறுவது போல, பெண்களுக்கும் இந்த வழி இருக்கவேண்டிய அவசியம். விதவைகளுக்கு முன் அறுப்புமுதல் கொடுத்து, பிறந்த வீட்டிற்கு அனுப்பிவிடுவதே வழக்கம். பிறகு அது மாறி சுவீகாரம் செய்வதென்று வழக்கம் வந்தது. இப்பொழுது பெரிய ஆட்களாகக் கூட்டிவிடுகிறார்கள். காலக்கிரமத்தில் அநேக விஷயங்கள் மாறுதலடைதல் சகஜமே. இந்த உணர்ச்சி நாட்டில் மிகப்பழுத்துப்போயிருக்கிறது. எனினும் அதைப் பகிரங்கமாகப் பேச, எவரும் முன்வருவதில்லை. பலர் திட்டினாலும் திட்டட்டு மென்று இவ்விஷயத்தைப்பற்றிப் பேச, நான் முன்வந்தேன். நேற்று என் சிநேகிதர் ஒருவர் தங்கள் வரவேற்பு முகவுரையில், இந்த விதவா விவாகத்தைப் பற்றி எழுதியிருப்பது தங்கள் சொந்த அபிப்பிராயமல்லவென்றும் மகாநாட்டிற்குத் தலைவராய் வந்திருப்பவரது யோசனையே யென்றும் கூறினார். உண்மையில் என்னுடைய யோசனையின்பேரில் நான் எழுதினதேயன்றி, இவர்கள் யோசனையல்லவென்பதைத் திட்டமாகச்சொல்லுகிறேன். இச்சீர்திருத்தம் நாம் செய்யாவிடில் நமது சமூகம் கெட்டழிந்துவிடும். இதை நாம் செய்வோமானால், நமக்குப் பெரும் புண்ணியம் ஏற்படும். சமூகத்திற்கு உதவி செய்தோர்களாகவும் ஆகுவோம். இவ்வழி கண்டாற்றான், கல்யாணமாகவேண்டிய இளைஞர்களின் கஷ்டமும் தீரும். நடைமுறையில் சிறிது கஷ்டமாயினும், தீர்மானம் நிறைவேற்ற வேண்டுவது அவசியமாகும்."

சு. தெ. ப. சி. ராம. அதிபர் திருவாளர் செ. அ. ராம. முருகப்ப செட்டியார் ஆமோதித்துப்பேசியதாவது:— "நம் சாதியில் ஏற்பட்டிருக்கிற இடுக்கண்களை ஒழிக்கவே இத்தீர்மானம் எழுந்தது. இது ஓர் புதிய முறையென்ற தோற்ற மிருந்துவருகிறது. சுமார் ௭௦ ஆண்டுகளுக்கு முன்னரே, வங்க நாட்டில் இம்முறை கையாளப்பட்டு வருகிறது. மற்றவர்கள் மனக்கவலையை ஒழிக்க வேண்டியாயினும், இத்தீர்மானத்தைச் செய்யவேண்டும். இங்கே சம்மாக் கையைத் தூக்கிவிட்டு ஒன்றும் செய்யாதிருப்பது அழகல்ல. நமது ஊர்களில் இத்தகைய விவாகங்கள் நடைபெறுமானால், அதற்கு அனைவரும் தாராளமாக உதவி புரிந்து ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

திருவாளர் மு. சோமசுந்தரன் செட்டியார்ஆதரித்துப் பேசியதாவது.:—

"இத்தகைய சீர்திருத்தங்களைச் சொல்பவர்களுக்கு, செய்பவர்களுக்கு சிரமந்தான் ஏற்படும். ஏசுநாதரை இப்பொழுது போற்றும் இலட்சக்கணக்கான ஜனங்களின் முன்னோர்களே அவரைப் பல்லாற்றானும் துன்புறுத்திச்சிலுவையில் அறைந்து, கொன்றார்கள். அதுபோல் இக்கொள்கையும் பின்னர் போற்றப்படும். இளமையில் மணம் செய்வது மிகக்கூடாதகார்யமாகும். கடவுள் சிருஷ்டியில் எந்த வித்யாசமுமில்லை. ஆண் மறுவிவாகம் செய்துகொள்ளலாமென்றால், பெண்கள் ஏன் செய்துகொள்ளக்கூடாது? பெண்கள் கணவனை இழந்துவிட்டு, நகை போய்விட்டதே, ஆடை அணியமுடியாதே என்று புலம்பி அழுகின்றனரே யன்றி, உண்மைக் காதலன் இறந்துவிட்டதாக அழுகிறார்களா? பெண்கள் மறுகல்யாணம் செய்துகொள்ளக் கூடாதென்று ஈசுவர நியதி யிருக்குமானால், அத்தகைப் பெண்களுக்குச் சிற்றின்ப இச்சையன்றோ இல்லாதிருக்கவேண்டும்?"

பின்னர் திருவாளர்களான சுப. ராமசாமி செட்டியாரவர்களும், ஓவ் அ. சிதம்பரம் செட்டியார் அவர்களும் ஆதரிக்கத், தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தலைவர் முடிவுரை.

சகோதரர்களே!

நாம் அனைவரும் எப்பொழுதும் உற்சாகமாகவும் ஊக்கமாகவும் இருந்து வரவேண்டும். அநந்நிய வசதிகள் நாம் செய்துகொள்ள வேண்டும். வெள்ளைக்காரர்களுடைய நல்ல குணங்களை நாம் மேற்கொள்ள வேண்டும். அவர்கள் எப்பொழுதும் ஆனந்தமாகவும் உற்சாகமாகவும் காலங் கழிக்கின்றனர். நாமோ ஆனந்த மில்லாத நிலைமையில் யாவற்றையும் செய்துவைத்துக் கொண்டிருக்கிறோம். மற்றவர்கட்கு நீங்கள் உற்சாகமூட்டவேண்டும். ராமன் வில்லைத் தூக்கியதும் மற்ற அரிய செயல்கள் நிகழ்த்தியதும் மனோ உற்சாகத்தாலேயே. அற்ப விஷயங்களிலெல்லாம் கருத்தைச் செலுத்திக் குறை கூறிக் கொண்டிருப்பவர்கள் பெரிய கெட்ட விஷயங்களில் பிரவேசிப்போனை நல் வழிப்படுத்தாதிருந்து விடுகின்றனர். மனம் உரமாயிருந்தாற்றான் எக்காரியத்தையும் நாம் செய்யலாம். சில ஆண்டுகட்கு முன்னர், கேவலமான நிலைமையிலிருந்த ஜப்பானியர் தம்மது முயற்சியால் தற்போது மிக உச்சதமான நிலைக்கு வந்திருப்பதை நோக்குங்கள். நம்மால் முடியாவிட்டாலும் பிறருக்கு இடையூறு இல்லாமலாவது இருக்கக்கூடாதா? தேள் கொட்டுவதுபோல முன்னேறிச் செல்வோரைக் கொட்டிக் கொண்டேயிருந்தால், எவ்வித நலமாவது உண்டாகுமா? எப்படி உயரிய காரியமாயிருப்பினும், ஊக்கம் குன்றச்செய்துவிட்டால் வாலிபர்கள் என்ன செய்யமுடியும்? நாம் இவ்வாறே காலத்திற்கேற்ற வாறு சீர்திருத்தங்கள் செய்து கொள்ளாதவரானாயிருந்து விடுவோமாயின், நமது சமூகமே சிறிது காலத்திற்குள் செத்து விடுமென்பது திண்ணம். காலமிருக்கும் நிலைமை எந்தவழி போய்ச் சேருமோ வென்று சொல்வதற்கில்லை. ஆகவே நாமெல்லோரும் நன்கு சிந்தித்து, பண்டைக் காலத்திற்கும் விரோதமில்லாமல் தற்கால முறைகளுக்கும் அநுகுணமானது அம்சங்களை வகுத்துக்கொண்டு, வேலை செய்வதே நலமாகும். இங்கு நிறைவேற்றப்பட்டதீர்மானங்களுள் இரண்டு மிக முக்யமானவை. அவற்றை நிறைவேற்றியது பர்மாவிற்கே பெருமை தருவதாகும். ஏனெனில், மூரன்முதலாக இத் தீர்மானங்களை நிறைவேற்றுவது இந்தப் பர்மா நாடேயாகும். அவற்றுள் முதலாவது பெண்களை உடன் அழைத்துவரும் தீர்மானமாகும். அதைக்கொண்டுவந்த சிறந்த பெருமை எனது சகோதரர் செ. அ. ராம. அருணாசலச் செட்டியார் அவர்களுக்கே உரியதாகும். அவர்களை நான் பாராட்டுகிறேன். முதலாவதாக அவர் அழைத்து வருகின்றாரோ அவரே மக்கு வழிகாட்டியாக இருப்பார். எவர் தடுப்பினும் நிச்சயமாக இன்னும் சில காலத்தில் ஏராளமான அன்பர்கள் பெண்களை உடனழைத்து வருவார்களென்பது திண்ணம். நமது செலவும், மற்ற வழிகளிலும் குறையப்போகின்றது. கூட்டிவருவதால், சில கஷ்டங்களிருக்கின்றனவென்பது உண்மைதான். ஆனால் கூட்டிவாராததால், நேரும் தீமைகளுக்கு அவை அதிகமல்ல. பெண்களைக் கூட்டிவந்தால் ஜாதிக் கட்டுப்பாடு போய்விடு மென்பது இல்லை. செட்டிநாட்டில் செய்துகொள்ள வேண்டுவது அவசியமென்பதை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன். எல்லோரும் சேர்ந்து செய்யாவிட்டால், வருகிறவர்கள் [illegible] செய்துகொள்ள வேண்டும். இத்தீர்மானம் நிறைவேறிய போதிலும், எல்லா ஆடவரும் இவ்வாறு செய்[illegible] எல்லாப்பெண்களும் இசைந்து [illegible] என்றும் சொல்வதற்கில்லை. ஒருசிலரே [illegible] தல் கூடும். அவ்வாறு வருபவர்கட்கு நீங்கள் பேராதரவு கொடுக்கவேண்டும். அருண்மை சிறுவயல் திருவாளர் அரு. ஸ. முத்தையா செட்டியாரவர்கள் இவ்விஷயத்தில் பெரிதும் ஊக்கங்காட்டி வந்ததை நாம் மறக்கமுடியாது. இம்முறைக்கு ஒரு சில முதலாளிகள் நிட்டூர ஆட்சேபிக்கக் கூடும். ஆனாலும் [illegible] கண்டு ஆதரிப்பவர்களே பெரும்பாலோர்கள். அதனால் இவ்விஷயம் நடைபெறாது விடுமென்று எவரும் கருதவேண்டாம். இவ்வாறு நடைபெறுமென்பதும் அவர்கள் கண்டறிவார்கள். இரண்டாவதான விதவா விவாக விஷயத்தில் நான் மிகுந்த ஆர்வமுள்ளவன். இதுவும் கொஞ்சகாலம் முன்னரோ அல்லது பின்னரோ செயலில் வந்துவிடுமென்பது தேற்றம். ஒருமைத்தின் அதிதீவிரதேசபக்தராயிருந்த திருவாளர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் இயற்றிய, "மெய்யறம்" என்றநூலில் "[illegible] மணப்பது புண்ணியம்; விரும்பாதாரை விரும்புதல் பாவம்" என்று கூறியிருப்பதை ஒவ்வொருவரும் சிந்தித்தல் அவசியம். இச்சந்தர்ப்பத்தில் ஒரு பெண்ணும் [illegible] இவ்விஷயத்தில் முன்வரமாட்டாளென்பது திண்ணம். எனினும், [illegible] விஷயமும் முடிவுபெறுமென்பதில் சந்தேகம் வேண்டாம். [illegible] கல்யாணமாகாத வாலிபர்[illegible] சொற்பமே [illegible] மட்டும் வாலிபர்கள் [illegible] மாகிவிடாது. கலப்பு விவாகம் ஆரம்பித்தலில் யாதும் [illegible]. இவ்வழி [illegible] நாங்கள் கல்யாணத்தை நிறுத்தவில்லை. மாப்பிள்ளைகள் சரியானவர்களாக வராதிருந்தாலே, முன்னர் நிறுத்தப்பெற்றது. வாலிபர்கள் [illegible] செய்[illegible] வேண்டுமென்பதே எங்கள் நோக்கம். [illegible] முன்னோர்கள் [illegible] என்பதற்கு, [illegible] ஆதாரங்களும் சரித்திரமும் இருக்கின்றன. எல்லோரும் அநுஷ்டிக்கக்கூடிய ஓர் சரியான திட்டத்தை வகுத்துக்கொண்டு, ஒற்றுமை மனத்துடன் வேலை செய்யவேண்டும். பிறர்க்கு [illegible] பொதுநல வாழ்க்கை நடத்தி[illegible], [illegible] கட்டுப்பாட்டுடன் [illegible] அனைவரும் [illegible] உழைக்கவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். என்னை இங்கு வரவழைத்து உபசரித்த இவ்வூர் சங்கத்தாருக்கும் வரவேற்புக் கழகத்தாருக்கும் ஏனைய அன்பர்கட்கும் எனது மனமார்ந்த வந்தனம் உரியதாகுக!

பின்னர் வரவேற்புக்கழகக் காரியதரிசி திரு. மு. சோமசுந்தரன் செட்டியார் தலைவருக்கும் கூடியிருந்த அன்பர்களுக்கும் வந்தனோபசாரம் கூறினார். வரவேற்பு சபைத் தலைவர், தலைவருக்கு மாலை சூட்ட இராமநாம-மங்களத்துடன் நிறைவெய்தியது.

திருவான் மிக்க பெரியார்களே! சகோதரர்களே!! பிரதிநிதிகளே!!!

நான் தனவணிக வாலிப மகாநாட்டு வரவேற்புக் கழகத்தாரின் தலைவனென்ற முறையில், உங்களுக்கும் நமது குலமணியாகிய திருமிகு பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்களுக்கும் நல்வரவு கூறுகின்றேன்.

இந்த மகாநாட்டுக்கு என்னை வரவேற்புக் கழகத் தலைவனாகக் கொண்டது நமது தனவைசிய இளைஞர் சங்கத்தாரின் இனத்தில் நான் ஒருவனென்ற அபிமானம் ஒன்றைக் கொண்டேயன்றி, வேறு காரணங் கண்டிருக்க மாட்டார்களென்று துணிவாக எண்ணுகின்றேன். அன்பர்களே! சிறியேனிடத்து அவர்கள் கொண்ட பேர் அபிமானத்துக்கு அவர்கள் பால் யான் என்றும் நன்றி மறவாதவனாக விருக்கின்றேன்.

கனவான்களே! இன்று நமது குலதெய்வமாகிய முருகப்பெருமானின் திருநாளில் நமது மகாநாடு கூடுவதால், இது என்னுளிலும் சிறந்த பொன்னுளாகும்.

இங்கு நமக்கென இரண்டு சங்கங்களுண்டு. அதில் ஒன்று பர்மா நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் சங்கம், மற்றொன்று தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம். முதலாவது சங்கம் முக்கியமாய் நமது சமூக நன்மையையும் தொழிலுக்குரிய அவசியா அவசியங்களையுமே கொண்டுள்ளதாகும். இரண்டாவது சங்கம் கொல்லாமை, புலாலுண்ணாமை, கல்வி, தெய்வ பக்தியையும் சமூக முன்னேற்றத்தை அவசியத்திலும் அவசியமாயுங் கொண்டது.

முதலாவது சங்கத்துக்கு மூன்றாவது மகாநாடு கூடவேண்டிய காலத்துக் கூடவில்லை. அதைப்பற்றி இப்போது ஒன்றும் விரிப்பதற்கிடமில்லை. இரண்டாவது சங்கத்தின் சார்பாக முதலாவது மகாநாடு இதுதான், ஆனால் முதலாவது சங்கச் சார்பான மூன்றாவது மகாநாடு கூடாத காரணத்துக்காக, இந்த மகாநாட்டைக்கூட்டியதாக எண்ணவேண்டாம். அன்பர்களே! முதலாவது சங்கம் இதுவரையில் சமூகத்திற்கான சில நன்மைகளையும் தொழிலுக்குரிய பல நன்மைகளையும் வெகு விரைவில் செய்திருக்கின்றதென்பது நாம் போற்றத்தக்கதாகும்.

இந்த மகாநாட்டுக்குத்தலைவராக வந்திருக்கும் பெரியார் நமது சமூகம் முன்னேறுவதற்காகப் பல அரியபெரிய காரியங்களைச் செய்துள்ளார்கள், செய்கின்றார்கள், செய்யவிருக்கிறார்கள். ஆனதுபற்றி, அவர்களையே நமது மகாநாட்டுத் தலைவராக வரவேணுமென்று விரும்பிக்கேட்டோம். அவர்களும் மது தாய் நாட்டிலிருந்து தேக சிரமத்தையும் பல ஜோலிகளையும் கருதாது, மாக்கலமேறி இங்கு வந்துள்ளார்கள். அவர்கள் காலமறிந்து செய்த நன்றி நாம் என்றும் மறக்கற்பாலதன்று. அது பற்றி உங்கள் சார்பாக வாழ்த்துரை கூறி மகிழ்ச்சி அடைகின்றேன். அவர்கள் நமது சமூகம் முன்னேறவேண்டிய விஷயங்களைப்பற்றி, பின்னர் சொற்பொழிவு செய்வார்கள். நீங்கள் அமைதியாயிருந்து கேட்டானந்திக்குமாறு, மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்செய்வதில் பல துறைகளுண்டு. அதில் பெரும்பாலும் நம்மவர்கள் வட்டித் தொழிலையே கைக்கொண்டவர்களாக இருக்கின்றோம். அந்தத் தொழிலுக்காக வென்று நாம் தனிமையாய் ஒரு படிப்புப் படித்துப் பரீக்ஷை கொடுத்து யோக்கியதா பத்திரம் பெற்றுவராமல், தொன்றுதொட்டு குலத்தொழிலாகவே வந்துகொண்டிருப்பதால், 'குலக்கல்வி கல்லாமல் பாதிவரும்' என்றபடி நாம் அதிகக் கஷ்டமில்லாமலே நடத்திவந்தோம்; வருகிறோம்.

[இங்கு வருமான வரியைப்பற்றியும் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியும் அம்முறையை நம்மவர் பயில வேண்டுமென்பது பற்றியும் வற்புறுத்தப்பட்டது. ஆசிரியர்.]

சகோதரர்களே!

நமது சமூகம் எல்லா வகையாலும் மிக மிகச் சிறப்புறதென்பது உலகம் அறிந்த விஷயமாகும். ஆனால் அதில் பல பல சீர்திருத்தங்கள் ஆகவேண்டியதிருக்கின்றனவென்பது நாம் அறிந்ததே; அதில் முக்கியமாய் அதிவிரைவில் சீர்திருந்த வேண்டியது 'கலப்பு மணம்' விவாகம் தடைபட்டிருப்பது ஒன்றே. அந்த ஒன்றுமாத்திரம் சீர்

வரவேற்புக் கழகத் தலைவர் திரு. பி. கு. நா.

சோமசுந்தரச் செட்டியாரவர்களின் சொற்பொழிவு.

திருந்திவிட்டால்,மற்றவை தாமே காலக்கிரமத்தில் சீர்திருந்திவிடுமென்பது அறிஞர்களின் நோக்கமாயிருக்கிறதென்பது பலரும் உணர்ந்துள்ளதாகும்.

அதைச் சீர்திருத்துவதற்கு நமது தாய் நாட்டிலுள்ள வாலிபர் சங்கங்கள் பல பல வேலைகளைச் செய்து அரும்பாடுபட்டு நமது பழைய ககஉ ஊர்க்கூட்டத்தைக் கூட்டின. அதில் கால நிலைக்குத் தக்கபடி முக்கியத் தீர்மானங்கள் பல வெற்றியோடு தீர்மானிக்கப்பட்டன. அந்தத் தீர்மானங்களில் பெண்ணுக்குப் பரியாயமாய் மாப்பிள்ளை கொடுக்கும் பணத்தை வரம்புக்குள்ளாக்கியதுமொன்று. அப்படி மகா நாட்டில் செய்த தீர்மானத்தை, கவனமாயிருந்து நமது வாலிப சகோதரர்கள் காத்துங்கூட, சிலர் தீர்மானத்துக்கு மாறுபடச் செய்ததைச் சிலர் ஆதரித்ததால், தீர்மானம் நிலைகுலைந்து மாப்பிள்ளை பெண்ணுக்குப்பணங் கொடுப்பதென்பது முன்னையிலும் அதிகக் கடுமையாய் ஆலகால விஷம்போல ஏறத் தலைப்பட்டு விட்டது. திரும்பவும் சமூகத் தொண்டையே தங்கள் கடமையாகக் கொண்ட நமது வாலிபச் சகோதரர்கள் பல தலைவர்கள் பால் சென்று, இதை எப்படி நிவர்த்திப்பதென வருந்திக்கேட்டும், விமோஜனமாகாமையால் ('கலப்புவிவாகம்') அன்னிய வகுப்புப் பெண்களை மணந்து கொள்ளலாமெனச் சில விவாகங்களைச் செய்து பார்த்தார்கள். அதற்குப் பலர் உடன்படாமையால், அது விருத்தியாகாமல் தயங்கிவிடவே, திரும்பவும் பழைய (தொண்ணூற்றாறூர்க் கூட்டம்) சமூக மகாநாட்டைக்கூட்ட முயற்சிகள் செய்து கூட்டி வைத்தார்கள். சமூகத்தலைவர்களெல்லாம் கூடி, மறுபடியும் வாலிபர்கள் இலகுவாய் மணம்புரிந்து கொள்ளுவதற்கான யோசனைகளைச்செய்து, மாப்பிள்ளை பெண்ணுக்குக்கொடுக்கும் தொகையை ஒரு வரம்பு கட்டித் தீர்மானம் செய்தார்கள். அந்த வரம்புப்படி சில விவாகங்கள் நடந்தனவென்றே சொல்லலாம். ஆனால் பணத்தாசை கொண்ட சிலர் இந்த வரம்புக்கு உடன்படாமையால், விவாகம் செய்ய வேண்டிய மக்களை விவாக முடியாது வைத்துக் கொண்டிருக்க நேர்ந்தது. இந்த நிலையில் அடுத்த வருஷம் ககஉ ஊர்க்கூட்டம் மகாநாடு கூடிற்று. அதில் முந்தின தீர்மானத்தையே இந்த விவாக காரியத்தில் முடிவு கண்டார்கள். ஆனால் அந்த முடிவுப்படி விவாகங்கள் மலியாமல் தயங்கிக் கொண்டிருக்கிறது. அப்படித் தயங்காமல் பெண்கள் மலியவேண்டுமானால், அதற்கு ஒரு புது வழியைக் கண்டுபிடித்தாலன்றி, மலியமாட்டாதென்று அறிஞர்கள் கருதுகிறார்கள். அப்படி மலியச்செய்வதும் இனமாறுபாடில்லாது மலிவு காண்பதுவே நலமாகும். ஏனெனில். நெற் சோற்றை உண்டு பழகிவந்தஒரு வழித்தோன்றலுக்குக் கம்பஞ்சோறு முதலிய ஏனைய உணவுகளைக் கொடுத்தால், பசியின் கொடுமைக்காக மட்டும் உண்டாலும் எப்படித் திருப்தியடையானோ அப்படியே. ஏனைய சமூக மக்களைக் காமங்காரணமாகக் கொள்வானேயன்றி, குலவிருத்தியாவதற்காகப் பெரும்பாலும் கொள்ளத் துணியமாட்டான். ஒருகால் துணிந்தால், நெற் சோறுண்டவன் கம்பஞ் சோறு முதலியவைகளை உண்டால் குடல் ஏற்காது எப்படி நோயுறுதற்கிடமாகுமோ அப்படியே. ஏனைய சமூக மகளை மணந்து சந்ததி உண்டானால், அந்த வழியில் தோன்றிய மகன் அனுலோமன் (உயர்குலத் தந்தைக்கும் இழிகுலத் தாய்க்கும் பிறந்த பிள்ளை) என இழிவாகிய நோய்க்கு ஆளாகவேண்டியதாகும். இதனால் அந்த மகன் சுய மதிப்பைக்கெடுத்த தாய் தந்தையர்களாகவும் வேண்டியது வரும். அன்றியும் கலப்பு விவாகமும் சிறிது பணச் செலவிலேயே நடப்பதாய்க் கேள்விப்படுகின்றோம். அது உண்மையானால், நமது சமூகம் முன் சிறு தொகை பெண்ணுக்குக் கொடுத்ததுதான் இப்பொழுது பெருந்தொகையாய்ப் பெருகிவிட்டதேபோல், அன்னிய சமூகப்பெண்ணுக்கும் இப்பொழுது சிறு தொகையாய்க் கொடுக்க ஆரம்பித்தால், நாளடைவில் பெருந்தொகையாய் வளர்ந்துவிடவும் கூடும். அப்படி வளர்ந்துவிட்டால், நமது சந்ததி கலப்பு விவாகத்திலுதித்தமக்களாவதோடுமில்லாது, நாம் கலக்கப்போன சமூகத்தில் பணச் செலவில்லாமல் பெண் சுலபமாய்க்கிடைத்ததும் நம்மால் அவர்களும் பணங்கொடுக்க சேர்ந்து அவர்களும் நமது வாலிபர்கள் நிலைக்குவந்து வேறொரு சமூகத்தில் கலக்க வேண்டியதுவரும். அப்படியானால் கொஞ்ச நாளையில் சமூகவரம்பே கெட்டுவிடவும் கூடுமே! ஆகையால் அன்னிய சமூகத்தில் புகுவது ஒரு பாலாக ஒதுக்க வேண்டியதாக இருக்கின்றது. இனி வேறு எவ்வகையால் நமது வாலிப சகோதரர்கள் பிறர் பழிப்பின்றியும் கைப்பொருள் முழுதும் கொடுத்து, கடன் வாங்கியும் கொடுத்து, அந்தக்கடனைத் தீர்ப்பதற்காக, கொண்ட மனைவியையும் பிரிந்து அன்னிய நாட்டுக்குச்செல்லாது உள்ளதைக் கொண்டே உத்தமமாய்வாழலாமென்றால், அதற்குத்தக்க நிலையாயுள்ள ஒரு வழியைக் கண்டுபிடித்தாலன்றி, பணம் கொடுத்துக் குலமகளையே கொள்ளுவதென்ற கொள்கை தீரமாட்டாதென்பது பலர் துணிவாகும். அது ஆஸ்திகனுயுள்ள ஒருவனுக்கு சாஸ்திர சம்மதமாயும் ஏனைய சமூகங்களும் முனைந்து கைப்பற்றுவதாயும் தக்க பெரியோர்கள் ஒப்புவதாயும் பணச் செலவில்லாததாயும் ஆண் பெண் என்ற இரு பாலார்க்கும் உற்ற துன்பத்தைப் போக்கி இன்பமளிக்கக் கூடியதாயும அவர்களால் பெற்ற மக்கள் அநுலோமராகாமல் சுயமதிப்புக் கொண்டு தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நிலையுளதாயும் நமது சமூகம் கொண்டுள்ள கோத்திரம் கோயில்முறைகளுக்குப் புறம்பாகாமலும் இருக்க வேண்டியது அத்தியாவசியம். ஏனெனில்கோயில் முறையென்பது நமது சமூகமாகிற நாட்டுக்கோட்டையாருக்கு ஒரு (அரண்) வேலி. அதைத்தகர்த்துவிட்டால், சமூகம் காப்பில்லாத பயிர் போலாகிவிடக்கூடும். ஆகையால் அதற்கேற்க, ஒரு புதுவழியைச்சொல்லுகிறேன். அதை நீங்களும் இன்னும் நமது சமூகத் தலைவர்களும், யோசித்துப் பார்க்க வேண்டும். அது தான் (பாலிய விதவா விவாகம்) வாலிபமாயுள்ள விதவைகளைப் பரஸ்பர விருப்பங்கொண்டுமணந்து கொள்ளுதல். இந்த இடத்திலெனது அருமைச்சகோதரர்கள் சற்றுநிதானித்து ஊன்றி, நான் கீழ்ச்செல்லுவதை நடுவு நிலைமை தவறாது யோசித்துத் தீர்மானிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

சகோதரர்களே! உலகத்தைத்தோற்றுவித்த எந்த முழு முதற்கடவுள் உண்டோ அவர் ஒருவரிடத்தில் அன்பும் மற்றொருவரிடத்துப் பகையும்கொண்டவராயிருக்கமாட்டாரென்பதுதான் உலகப் பெரியார்கள் கொண்ட கொள்கையாகும். ஆகையால் உலகிற்றோன்றிய ஆண் பெண் என்ற இரு பாலாருக்கும் சுகதுக்கங்கள் சமமாகவேதானிருக்கவேண்டும். அது உண்மையானால் மனைவியை இழந்த ஒரு மகன் தனக்கு வேண்டிய சந்ததிகள் இருந்தும் கூட, எத்தனை மறு மனைவியை வேண்டுமானாலும் விவாகம் செய்துகொள்ளலாம். கணவனை இழந்தவள் கன்னிகையாயினும் மறு மணம் கூடாதென்பது கடவுள் சம்மதமாக இருக்குமா? இதை நன்றாய் நடுவு நிலைமை குன்றாது யோசிக்கவேண்டும். ஒரு சாரார் விதவா விவாகம் சாஸ்திரசம்மதமாகுமா, உலகப் பெரியார் ஒப்புவார்களாவென்று சொல்லுவார்கள். அதைப்பற்றிச் சென்னையில வெளிவரும் "லோகோபகாரி" ப்பத்திரிகை ககஉஎ-ஞு ஜனவரி-மீ கூஉ வெளிவந்த முப்பத்தி மூன்றாவது புத்தகம் ஒன்றாவது இலக்கப் பத்திரிகையில் அதர்வண வேதம், ருக் வேதம், மனு ஸ்மிருதி, வசிஷ்டர் ஸ்மிருதி, பராசரர் ஸ்மிருதி, கங்காதர உபாத்தியாயர் செய்த விதவா விவாக மீமாம்சைகள் விதவா விவாகத்தை ஆதரிப்பதாய் எழுதியிருக்கிறது. ஆனால் நான் அவைகளைப் படிக்கும் பாக்கியத்தை இன்னும் பெற்றேனில்லை. சந்தேகமுள்ளவர்கள் மேற்கூறியவைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இன்னும் பஞ்சாப் நாட்டில் லாகூரில் சர் கங்காதாராம் என்றபெரியார்ககஉசு-ம்வருடமுதல் விதவா விவாக சபையொன்று ஸ்தாபித்து, பல அரிய விஷயங்களை அதன் கிளையாக அறுநூறு சங்கங்கள் மூலமாய்ப் பிரசாரம் செய்து, இதுவரையில் ௬௦௦௦ விதவைகளுக்கு விவாகம் செய்திருக்கிறார்களாம். இந்தச் சபையை உலகப்பெரியார்கள் ஆதரிப்பதுடன், மகாத்மா காந்தி அவர்களும் இதை ஆதரித்து "யங் இந்தியா" என்ற பத்திரிகையிலும் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, சாஸ்திர சம்மதத்திற்கும் உலகப்பெரியாருக்கும் உடன்பாடானதாகவே யாகின்றது. இந்த இடத்தில் முக்கியமாயொன்று கவனிக்கவேண்டியதிருக்கிறது. ஓர் பெண்ணைப்போஷிக்கும் தாய்தந்தையர்கள் அவளுக்குவயதுவரும் முன்னே பணம்வாங்கியோ இலவசமாகவோ விவாகம்செய்து நாயகனை இழந்த ஒரு பெண் மறு விவாகம் செய்து கொள்ள எண்ணினால், தாய்தந்தையர் முன்னமே தங்கள் கடமையைச் செய்துவிட்டபடியாலும் முதல் மணம் புரிந்த நாயகன் அக்கினி சாக்ஷியாக உன்னைக் கைவிடுவதில்லை என்று சொல்லி அதன் அடையாளமாகக் கட்டிய (தாலி) திருமாங்கலியத்தை அவன் இறந்த பின்னர் சுற்றத்தார் வாங்கிவிடுவதாலும் அக்கட்டிலிருந்து விடுபடுகிறாள். ஆகவே அவள் ஏதேச்சையுள்ளவளாய் மறுமணத்தை விரும்பும் நாயகனை விவாகம்செய்து கொள்ளலாமெனக் கருதப்பெறுகிறது.

அன்பர்களே! இந்தப் புதுவழியைக் கண்டால், நமது வாலிபர்களுக்கு இலகுவாய் மணமுடிவதோடு, தலைவனை இழந்த பெண் இறைவனால் அமைக்கப்பட்ட ஆயுள் காலம் வரையில் துக்கப்பட்டு, மூலையில் கிடந்து, தன்னோடொத்த சகோதரிகளும் தாயும்கூட அவரவர்கள் நாயகனோடு கூடிக் குலாவி யிருப்பதைக் கண்டு பெருமூச்சு விடாமலும் இருக்கலாம். சந்ததியும் விருத்தியாகக்கூடும். விதவா விவாகத்தைஆதரியாவிட்டால், அருமையாய்ப்பெற்ற புதல்விகளில் விதவைகளாக நேர்ந்த அனைவரும் தங்கள் வாழ்நாளை வீணாகக் கழித்து, அவலமாய் மாளவேண்டியதைத்தவிர, என்ன பயனுண்டாம்? ஆரம்பத்தில் ஒன்றைச்சமூகத்தில் நூதனமாய்ப்புகுத்துவதென்றால், அருவருப்பாயும் கஷ்டமாயுமிருக்கலாம். ஆகையால் அந்த விஷயத்தால் இரு பாலாரும் சுகமடைவார்களா; அதனால் வரும் சந்ததிக்கிழுக்கின்று; மணங்கள் பணச்செலவில்லாது வாலிபர்களுக்கு நடைபெறுமா; ஏனைய சமூகத்திற்கு நம்மால் இடையூறில்லையா; நமது சமூகக்கட்டுப்பாடு தளராதா; முதல்மணம்போல் நமது கோயிலில் விவாகப்பதிவுக்குத் தடங்கல் உண்டாகாதபடி யிருக்குமா; ஊரார் ஒப்புவார்களா; (தொண்ணூற்றாறூர்க்கூட்டம்) நமது சமூக மகாநாடு அங்கீகரிக்குமா; நாட்டுக்கோட்டையார் என்ற நமது அரணுக்கு ஏதாவது மாறுதலுண்டா என்பன வாதிய ஏனையவற்றையும் நீங்கள் நடுவு நிலைமையிலிருந்து ஆராய்ந்து இதை ஒப்புக்கொண்டு தீர்மானத்திற்குக் கொண்டுவந்து நமது சமூக மகாநாட்டுக் (தொண்ணூற்றாறூர்க்கூட்டம்) காரியதரிசி அவர்கட்குத் தெரிவித்து, அடுத்த சமூக மகாநாட்டில் வெற்றியுள்ள தீர்மானங்களில் ஒன்றாகக் கொண்டுவரும்படி, உங்களையும் நமது தாய் நாட்டுச் சமூகத் தலைவர்களையும் மிகவும் தாழ்மையோடு வேண்டிக்கொள்கின்றேன்.

இனனென்று ஞாபகப்படுத்தாமலிருக்க முடியவில்லை. இப்பொழுது கூடிய பாண்டு நகர் காங்கிரசில்கூட இந்து விதவைகளுக்கு மறுமணஞ் செய்யவேண்டுமென்று பிரசாரஞ் செய்யவேணுமாய் ஓர் தீர்மானம் கொண்டுவந்ததாய்க் கேட்டு, சந்தோஷிக்கிறேன்.

சகோதர சிகாமணிகளே! உங்களுடைய அருமையானதும் அநேகம் பொன் விலையேறப்பெற்றதுமான காலத்தை என் பேச்சுக்காக்கிவிட்டதைப்பற்றி வருந்தாதிருக்க வேண்டுகிறேன். இனி இம்மகாநாட்டுத் தலைவரவர்கள் சொற்பொழிவில் நான் கூறியவற்றில் அவர்கள் அபிப்பிராயத்தையும் இன்னும் நமது சமூக முன்னேற்றத்திற்கு வேண்டிய ஏனையவைகளையும் பேசுவார்கள். நீங்கள் எல்லோரும் அமைதியாக இருந்து, மகாநாட்டை வெற்றியோடு நடைபெறுமாறு செய்ய, உங்களையும் எல்லாம வல்ல இறைவனையும் கேட்டுக்கொள்கிறேன்.

ராய. சொக்கலிங்கனால் காரைக்குடி, ஊழியன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

END OF
ISSUE